Date : 18.09.2025

SC.No. : 185/2024

PW : 1

Name : முத்துலட்சுமி

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்குவிசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :

1. காயம்பட்ட அ.சா.2 துரைராஜ் எனது கணவர் என்றால் சரிதான். அ.சா.3 முருகன் எனது மகன், அ.சா.4 தேவி எனது மகள் மற்றும் அ.சா.5 ஆண்டிச்சிஎனது அம்மா என்றால் சரிதான். எதிரிகள் இருவரும் எனது கணவரின் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். எங்களுக்கும் எதிரிகளுக்கும் பூர்வீக சொத்து சுமார் 9 ஏக்கர் , கிணறு மற்றும் மோட்டார் பொதுவாக உ ள்ளது என்றால் இல்லை, கிணறு மட்டும் தான் பொதுவாக உள்ளது. கடந்த 2018 ம் ஆண்டு எனது மாமனார் ஆண்டி எனது கணவர் பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்ததாக ஆவணம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை.

2. எனது மாமனார் எனது கணவர் மீது சொத்துக்களை திரும்பவும் கேட்டு காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விபரம் எனக்கு தெரியும் என்றும் அவ்வாறு புகார் கொடுத்த விபரத்தை இந்த வழக்கின் புகாரிலேயே தெரிவித்துள்ளேன் என்றும் அதை மறைத்து வேண்டுமேன்றே நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகாரை யார் எழுதியது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, யார் எழுதிக்கொடுத்தார்கள் என்று தெரியாது.

3. சொத்து பாகப்பிரிவினை சம்மந்தமாக 15 முறை பேச்சுவார்த்தை நடைபெற்றிருக்குமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது

வீட்டுக்கருகில் எதிரிகளின் வீடு உள்ளது என்றால் சரிதான். எனது கணவர் சொத்து பிரிந்து கொடுக்காததால் எதிரிகள் கேணியை நிறுத்தி வைத்தார்கள் என்றால் சரிதான். எனது கணவருக்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்று நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது.

4. கிணற்றை உபயோகப்படுத்தக்கூடாது என்பதற்காக எனது கணவரும், எனது மகனும் கிணற்றில் இறங்கி வயர் மற்றும் பைப்பை வெட்டிவிட்டார்கள் என்றால் இல்லை. அவ்வாறு கிணற்றில் இறங்கும்போது எனது கணவருக்கு அடிபட்டு காயம் ஏற்பட்டதை மறைத்து ஆஜர் எதிரிகள் தாக்கியதாக பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது கணவருக்கு காயம் ஏற்பட்ட காரணத்தால் நான் தான் எதிரிகளுடன் வீண் தகராறு செய்து அசிங்கமாக பேசி எதிரிகளுடன் சண்டை போட்டேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சண்டை போட்டதில் எதிரி முருகேசனுக்கு தலையில் இரும்பு பைப்பால் அடித்து ரத்தக்காயத்தை ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல.

5. எதிரி முருகேசனுக்கு ஏற்பட்ட காயத்திற்காக மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தார் என்றால் சரியல்ல. எதிரிகள் இருவரும் தங்கள் சொந்த வீடுகளை விட்டு தற்சமயம் காலி செய்து சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான். எதிரிகள் எங்கள் தொந்தரவு தாங்கமுடியாமல் ஊரை விட்டே காலி செய்து சென்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரிகள் என்னை அசிங்கமாக பேசி காயங்கள் எதுவும் ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு காயம் ஏற்பட்டிருந்தால் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்து முறையாக சிகிச்சை பெற்றிருப்பேன் என்றால் எனக்கு காயம்பட்டு துவரங்குறிச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று அங்கிருந்து திருச்சி அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக சென்றேன்.

6. பொது சொத்தில் எதிரிகளுக்கு உரிய பங்கினை கொடுக்ககூடாது என்பதற்காக அவர்கள் மீது பொய்யாக புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**: இல்லை

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.09.18 15:54:44 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் ,**

**சிவகங்கை.**